## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.67/2017

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பெரியசாமி | மதம் | : இந்து |
| த/பெ | : பாப்பா முத்தையா | ஜாதி | : -- |
| வயது | : 73 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : ஆசிரியர் ஓய்வு | வட்டம் | : திருத்தணி |

**20.11.2024**

**பி.வா.சா. 1 ன் முதல் விசாரணை தொடர்ச்சி**

1. பட்டா எண்.100ல் என் மனைவி பிரேமாவதி பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.23ல் என் மனைவி பிரேமாவதி பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான அ பதிவேடு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அ பதிவேடு பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** திருத்தணி நீதித்துறை நடுவர் நீதிமன்ற ஆண்டு பட்டிகை வழக்கு எண்.205/2011ன் தீர்ப்புரை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(தீர்ப்புரை பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)